**தலைப்பு 1 – சனாதிபதி அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சனாதிபதி அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சனாதிபதி அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூலை 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சனாதிபதி அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் சனாதிபதி அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் சனாதிபதி அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) சனாதிபதி அலுவலகத்தால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

<table>
<tr><th>கணக்காய்வு அவதானிப்புக்கள்</th><th>பரிந்துரை</th><th>பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை</th></tr>
<tr><td>கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கும் அரச கணக்குகள் திணைக்களம் அறிமுகப்படுத்தியிருந்த புதிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொதுத் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்ட நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதிக்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.
<table>
<tr><th>சொத்துத் தொகுதி</th><th>சொத்துக்கள்</th><th>2018.12.31 இல் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி</th><th>புதிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீதி</th><th>வேறுபாடு</th></tr>
<tr><td></td><td></td><td>ரூபா</td><td>ரூபா</td><td>ரூபா</td></tr>
<tr><td>9151</td><td>கட்டிடம் மற்றும் நிர்மாணம்</td><td>4,004,731,245</td><td>42,173,777</td><td>3,962,557,468</td></tr>
<tr><td>9152</td><td>இயந்திரம் மற்றும் உபகரணம்</td><td>6,266,866,200</td><td>535,873,351</td><td>5,730,992,849</td></tr>
</table>
</td><td>நிதிக்கூற்றுக்களிலும் இணக்கக்கூற்றுக்களிலும் சரியான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.</td><td>சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் பெறுமதி புதிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக கணக்கீடு செய்யப்படுவதுடன் இந்த ஆண்டின் இறுதிக்கு முன் சகல தரவுகளும் புதிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக கணக்கீடு செய்யப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம்.</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 9160 | நடைமுறை வேலை | - | 70,349,494 | (70,349,494) |
| | | ------------- | ------------ | ------------ |
| மொத்தம் | | 10,271,597,445 | 648,396,622 | 9,623,200,823 |
| | | ===== | ===== | ===== |

## 1.6.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பந்தியின் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>சுனாதிபதி அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்யிருந்ததுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக முன்னரே மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் வினைத்திறனாக நடாத்திச் செல்வதற்கான மாற்றங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அந்த மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து பேணிச் செல்லப்படுவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் 2019 ஆம் ஆண்டு முதல் வழங்க முடியுமென தயவுடன் அறிவிக்கின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்- வருமானக் குறியீடு- 10.02.11.00- தொலைபேசி பாவனையாளர் வரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் தொலைத் தொடர்பு சேவையினைப் பெறுகின்ற சகல சகலநபர்களிடமிருந்தும் தொலைத்தொடர்பு வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் தனியார் நிறுவனமொன்று அவ்வாறு வரி செலுத்தியமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. | வருமான முகாமைத்துவம் முறைமைப்படுத்தப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்குரிய தொலைத்தொடர்பு வரி அறவிடுவதற்காக ஆரம்ப சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை தயவுடன் அறியத்தருகின்றோம். |
| (ஆ) எந்தவொரு ஆண்டிற்குமுரிய நிலுவை தொலைத்தொடர்பு வரி வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது அதன் பின்னுள்ள வருடத்திற்குரிய தொலைபேசி கம்பனியால் செலுத்தப்படுகின்ற வரி பெறுமதி அடிப்படையாகக் கொள்ளப்பட்டதுடன் அவ்வாறு பின்னைய ஆண்டின் போது நிலுவை வரி செலுத்தாத சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு நிலுவை வருமானம் இனங்காண்பதற்காக குறித்த முறைமையொன்று காணப்படவில்லை. அதன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய நிறுவனத்தால் மேலும் செலுத்த வேண்டிய தொலைத் தொடர்பு வரி ரூபா 10,183,893 ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடல் முறையாகவும் விரைவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். | அதில் ரூபா 967,109,255.28 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி நிலுவைப் பணமான ரூபா 10,183,892.72 தொகையை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். |

**2.2 வருமானக் குறியீடு இன்றி வருமானம் சேகரித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 149(1) உப உறுப்புரையின் பிரகாரம் சகல வருமான வரி, தீர்வை வரி, ஆதன வரி மற்றும் கட்டணங்களிலிருந்து கிடைக்கின்ற வருமானங்களும் குறித்த பணிகளுக்காக ஒதுக்கப்படாத குடியரசிற்குச் சொந்தமான சகல வருமானங்களும், பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும் தாமரைத் தடாக மண்டபத்தின் பிரதான நடன மண்டபம், திறந்த மண்டபம், முற்பயிற்சி மண்டபம், திறந்த வாகன தரிப்பிடம் மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பன 2011 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்குவதன் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் மற்றும் பெறுவனவுகள் அவ்வாறு திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது அந்த வைப்புக் கணக்கின் பெறுவனவுகள் ரூபா 159.05 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 83.39 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கின் மீதி ரூபா 254.13 மில்லியனாக இருந்தது. | அரசியலமைப்பு உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சகல வருமானங்களும் பெறுவனவுகளும் திரண்ட நிதியத்திற்கே செலுத்தப்பட வேண்டும். | தாமரைத் தடாக மண்டபத்தின் செலவினங்களைச் செய்வதற்காக வருடாந்த பாதீட்டில் மதிப்பீட்டுக்காக கோரப்பட்டிருந்த போதிலும் அதற்காக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. அதனால் மண்டத்தை வாடகைக்கு வழங்குவதன் மூலம் பெறப்படுகின்ற வருமானம் வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு அதன் மூலம் செலவினங்கள் செய்யப்பட்டிருந்தன. |

**2.3 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சனாதிபதி அலுவலகத்தின் 2018 - வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் 04 மீண்டெழும் செலவின விடயங்களுக்காகவும், 05 மூலதன செலவின விடயங்களுக்காகவும் ஒதுக்கப்பட்ட ரூபா 2,251,600,000 தொகையான நிதி ஏற்பாடு, அந்த செலவின விடயங்களுக்காக ஆண்டின் குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 610,000,000 தொகையான நிதி ஏற்பாட்டை ஒப்பீடு செய்த போது குறை நிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டின் அளவு பாதீடு | பாதீட்டு முன்மொழிவுகளில் உள்ளடக்கப்பட்ட பணிகளுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு திட்டமிடப்பட்ட பிரகாரம் செய்தல் தொடர்பாகவும் சரியான எதிர்வு கூறலின் அடிப்படையில் | புதிய பதவியணியினரை ஆட்சேர்த்தல் 2018 சனவரி முதல் சம்பள அதிகரிப்பு, 1/3 மற்றும் ¼ படிகள் புதிய சம்பளத்தில் செலுத்துதல், நிலுவை பட்டியல்களின் கொடுப்பனவுகளுக்காக நிதி ஏற்பாட்டைப் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டுடன் ஒப்பிடும் போது 5 சதவீதம் முதல் 155 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | மதிப்பீட்டை தயாரித்தல் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும். | பெற்றுக்கொள்ளல் போன்ற காரணங்களினால் மேலதிக நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்ளவேண்டி ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) | 2018 - வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் 04 மூலதன செலவின விடயங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு பூச்சிய பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும் குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் அந்த செலவின விடயங்களுக்காக ரூபா 340,890,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவினம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பாதீட்டு முன்மொழிவுகளில் உள்ளடக்கப்பட்ட பணிகளுக்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு, திட்டமிடப்பட்ட பிரகாரம் செய்தல் தொடர்பாக மற்றும் சரியான எதிர்வு கூறலின் அடிப்படையில் மதிப்பீடு தயாரித்தல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். | 2 பாதீட்டு முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்காக சிறிய அளவிலான விவசாய கூட்டு முயற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இலங்கை அமரபுர சங்க சபையில் உள்ள கௌரவ கொட்டுகொட கம்மாவாச மாஹினிபானன் அவர்களின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக மோட்டார் வாகனம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக இந்த மேலதிக நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிந்ததை தயவுடன் அறியத்தருகின்றோ. |
| (இ) | 19 செலவின விடயங்களின் கீழ் மிகை நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாட்டில் 28 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டதுடன் அதில் 15 செலவின விடயங்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு திட்டமிடப்பட்ட பிரகாரம் பயன்படுத்த வேண்டும். | கட்டுநிதி கிடைக்காமை, வெளிநாட்டு மானியங்கள் கிடைக்காமை, உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்திட்டங்கள் நிறுத்தப்பட்டமை, பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் இடம்பெறாமை |

| | | |
|---|---|---|
| | | போன்றவற்றின் காரணத்தினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது . |

**2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்ட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பொது திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்ட பொறுப்புக்களுக்கு இடையே ரூபா 57,908,820 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் சரியானதும் நாளது வரையானதுமான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். | புதிய சிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் ஊடாக அறிக்கையிடப்பட்ட பொறுப்புக்கள் 2018.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு கட்டுநிதி கிடைக்காமல் கொடுப்பனவு செய்வதற்கு முடியாதிருந்த பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டதுடன் நிதிக் கூற்றுக்களில் அத்திகதியில் கட்டுநிதி இன்றி கொடுப்பனவு செய்யமுடியாதிருந்த பட்டியல்களின் பெறுமதி மற்றும் 2018.12.31 ஆம் திகதியின் பின்னர் கிடைத்த 2018 ஆம் ஆண்டிற்காக ஏற்படுத்தப்பட்ட பொறுப்புக்களுக்குரிய கொடுப்பனவுகள் செய்யப்பட்ட உறுதிச் சீட்டுக்களின் பெறுமதி என்ற இரண்டினதும் கூட்டுத்தொகையாக இருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். |

**2.5 வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமானம் 571 இன் பிரகாரம் காலங்கடந்த வைப்புக்கள் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், சனாதிபதி அலுவலகத்தில் பொது வைப்புக் கணக்கில் 2018 திசெம்பர் 31 இல் 2 வருடங்களை விஞ்சிய ரூபா 50,000 தொகையான வைப்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேமிப்பாக காணப்படுகின்ற ரூபா 50,000 தொகையான மீதியை எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

## 3.1 செயலாற்றல்

### 3.1.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம், 2014 பெப்ரவரி 14 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் தயாரிக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் 2014 ஆம் பெப்ரவரி 17 ஆம் திகதி 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்தம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம். |

### 3.1.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சனாதிபதி அலுவலகத்தின் அபிவிருத்தி மற்றும் விஷேட செயற்திட்ட பிரிவினால் அமுல்படுத்தப்படுகின்ற 03 நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் மீளாய்வாண்டிற்கான பாதீட்டு நிதி ஏற்பாடு, உள்ளபடியான செலவினம் மற்றும் சேமிப்பு என்பன பின்வருமாறு இருந்தன. | திட்டமிடப்பட்ட பிரகாரம் உரிய பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும். | அபிவிருத்தி மற்றும் விஷேட செயற்திட்ட பிரிவிற்குரிய அமுல்படுத்தப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டங்களின் சேமிப்புக்களுக்கான காரணமாக இருந்ததுடன் கட்டுநிதி கிடைக்கப்பொறாமை, உரிய நிறுவனங்களுக்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட போதிலும் செலவினம் செய்யப்படாமை, பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை போன்றனவாகும். |

| நிகழ்ச்சித் திட்டம் | 2018 இன் பாதீட்டு நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்பு | நிதி ஏற்பாட்டுடன் ஒப்பிடும் போது சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |

| | | | | |
|---|---|---|---|---|
| சூழல் பாதுகாப்பு தே.நி.தி | 496 | 225.8 | 270.2 | 54 |
| சிறுவர் பாதுகாப்பு தே.நி.தி | 149 | 109.5 | 39.5 | 26 |
| தேசிய கலாசார புத்துயிரளிக்கும் விசேட செயற்பாட்டு அலகு | 16 | -8.6 | 7.4 | 46 |
| | | ------------- | ------------ | ------------- |
| மொத்தம் | 1400 | 1020.2 | 379.8 | |
| | | ===== | ===== | === |

இதன் பிரகாரம் நிகழ்ச்சித் திட்டங்களின் சேமிப்பு 26 சதவீதம் முதல் 54 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் சனாதிபதி அலுவலகத்தின் செயலாற்றல் அறிக்கை மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் 06 நிகழ்ச்சித் திட்டங்களுக்கான செலவின நிதி ஏற்பாட்டிற்கும் இடையே ரூபா 203 மில்லியன் தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்து. | புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் நாளது வரையாக பேணப்பட வேண்டும். | மேலதிக நிதி ஏற்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு ஏற்பட்டிருந்தமை மற்றும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாற்றுதல் போன்ற விடயங்கள் வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தன. |
| (இ) | சனாதிபதி அலுவலகத்தினால் மேற்கூறப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் அவற்றின் செயல் முன்னேற்றங்களை பரீட்சித்த போது தெரிவு அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நுவரெலியா மாவட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | கிராம சக்தி செயற்திட்டத்தின் கீழ் வலப்பனை கல்கடப்பத்தன கிராம உத்தியோத்தர் பிரிவின் கோப்பி பயிர்ச் செய்கை அபிவிருத்திக்காக இரண்டு பாதுகாப்பு கூடாரங்கள் ரூபா 666,640 தொகையான செலவில் கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. கோப்பி நாற்றுமேடைக்கான பாதுகாப்பான கூடாரமொன்றை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் தயாரித்து இருந்ததுடன் அதன் பிரகாரம் | ஆவணங்களை நாளது வரையாக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும். | அளவிடைப்பத்திரம் தவறின் காரணமாக கோவையில் உள்ளடக்குவதற்கு முடியாமல் போயிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | கூடாரத்திற்காக செலவான GI குழாய் அளவு மற்றும் வலை சதுர மீட்டர் அளவு என்பன காண்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் தொழில்நுட்ப உதவியாளர் பட்டியல்களை சமர்ப்பித்திருந்த போதும் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட கூடாரத்தின் நீள, அகலம் மற்றும் உயரத்தின் பிரகாரம் எந்தவொரு அளவிடையும் பட்டியலில் குறிப்பிடப்படாமையினால் அளவிடைகளை பரீட்சிக்க முடியாதிருந்தது. | | |
| (ii) | கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழையிலையினைப் பயன்படுத்தி சுற்றாடலுக்கு சாதகமாக லஞ்சீட் உற்பத்தியை செய்யும் செயற்திட்டத்திற்காக வலப்பனை பிரதேச செயலகம் ரூபா 357,000 தொகையான செலவினத்தில் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்திருந்ததுடன் இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கட்டிடத்தை பழுது பார்ப்பதற்காக ரூபா 1,254,220 தொகை செலவிடப்பட்டிருந்தது. இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் யன்னல்களுக்காக பாதுகாப்பான கிரில் இடப்படாமையினால் அந்த இயந்திரத்தின் பாதுகாப்பிற்கு ஆபத்து ஏற்படக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அடிப்படையாக காணப்படுகின்ற வாழை பத்திரங்களில் லஞ்சீட் உற்பத்தி செய்வதற்கு கெவன்டிஸ் வகையின் வாழை கன்றுகள் 1500 இனை பயிர் செய்வதற்கு 2018 திசெம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு செய்யப்பட்ட 2019 பெப்ரவரி 14 ஆம் திகதி வரை வாழைக்கன்றுகள் கொள்வனவு செய்யப்படாதிருந்ததுடன் லஞ்சீட் உற்பத்தியும் ஆரம்பிக்கப்படவில்லை | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 91 நீர் மூலங்களில் 40 இனை மாத்திரம் அளவிடுவதற்கு முடியுமாக இருந்தது. ஒதுக்கப்பட்ட மிகுதி ரூபா 700,000 தொகையான தென்கிழக்குப் பக்கம் நவம்பர் மாதத்தில் செயலிழந்தமை மற்றும் ஆண்டின் இறுதியில் கணக்குகளைத் தீர்ப்பதற்காக காணப்பட்ட வரையறுக்கப்பட்ட காலம் என்பவற்றினால் மீண்டும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததை தயவுடன் அறியத்தருகின்றோம். |
| (iii) | சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டம் 2016 – 2018 பெருந்தோட்டக் கம்பனிகளில் நீர் தேக்கங்களைப் பாதுகாக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 3,082,500 தொகையான நிதி ஏற்பாடு வலப்பனை பிரதேச செயலகப் பிரிவிற்கு சனாதிபதி அலுவலகத்திலிந்து வழங்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் நீர்த் தேக்கங்களில் அமைந்துள்ள 91 காணிப் பகுதிகள் காணப்பட்டமை இனங்காணப்பட்டிருந்தும் 40 காணிக் கூறுகள் மாத்திரமே காணி அளவை செய்யப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி இந்த நிதிஏற்பாடு வழங்கப்பட்டதுடன் நீர்த் தேக்கப் பிரதேசம் மாத்திரம் அளவீடு செய்யப்பட்டிருந்தும் தூண் நட்டி அவற்றை வேறுபடுத்தும் பணிகள் நிறைவேற்றப்டாமையினால் செற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. பெருந்தோட்டக் | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 1500 வாழைக் கன்றுகளை வழங்குவதற்கு நாற்றுமேடையாளருக்கு 06 மாதம் அளவிலான காலம் எடுக்கின்றமையின் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2019 பெப்ரவரி 14 ஆந் திகதி வரையிலும் அந்த செற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தமையை அறியத்தருகின்றோம். |

கம்பனிகளுக்குரிய காணிகளில் நீர்த் தேக்கப் பிரதேசங்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக மூன்று தனியார் காணிகளில் பங்கசு பரிசோதனை நடாத்துவதற்காக காணி உரிமையாளர்களுக்கு ரூபா 50,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட அறிக்கை சரியாகத் தயாரிக்கப்படாதிருந்தமையும், தேவையான சந்தர்ப்பங்களின் போது பெறுகை மதிப்பீடு தயாரிக்கப்படாமையின் காரணமாகவும் நீர்த் தேதேக்கங்களைப் பாதுகாப்பதற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 700,000 தொகை மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

### 3.2 இழப்பு மற்றும் நட்டம்

2018 ஆம் ஆண்டில் சனாதிபதி செயலகத்திற்குரிய வாகனங்கள் 180 சந்தர்ப்பங்களின் போது விபத்திற்குள்ளாகியிருந்ததுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிககூற்றுக்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்டிருந்த போதும் நட்டத்தைப் பதிவழிக்காமல்/ முன்கொண்டுவரப்பட்ட விபத்துக்களின் எண்ணிக்கை 144 ஆகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீடு பெறப்படாமை/ உரிய தகவல்கள் காணப்படாமையின் காரணமாக நட்டத்தின் பெறுமதி தீர்மானிக்க முடியாதிருந்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 71 ஆக அதில் இருந்தது. இந்த விபத்துக்களில் 2014 ஆம் ஆண்டு முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஏற்பட்ட விபத்துக்களும் உள்ளடங்குகின்றது. | விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2014, 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய விபத்துக்கள் தொடர்பான தகவல்கள் காணப்படாமையின் காரணமாக தீர்த்து வைக்க முடியாத நிலையொன்று காணப்பட்டது. 2016- 2018 போன்ற வருடங்களில் ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக இது வரையிலும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படுகின்றது. பழுதுபார்த்தல் தேவைப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. |
| (ஆ) | ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் மேற்கூறப்பட்ட விபத்து ஏற்பட்டிருந்த போதிலும் மதிப்பீடு பெற்றுக்கொள்வதிலுள்ள தாமதத்தின் காணமாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்க முடியாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த அலுவலகத்திற்குரிய வாகனங்கள், வாகன உரித்து காணப்படுகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் இல்லாத பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. தாமதமடைந்தமைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | விபத்து ஏற்பட்ட வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக வேறொரு வாகனத்தை போக்குவரத்துப் பிரிவின் மூலம் வழங்க முடியாதிருந்தமையே அதிகமாகத் தாக்கமளித்திருந்தது. |
| (இ) | அவ்வாறே புதத்கங்களிலிருந்து பதிவழிக்கும் கூற்றில் உள்ளடக்கப்பட்ட சில விபத்துக்குள்ளான வாகனங்கள், உடைந்த வாகனங்களாக இருந்தமையும் 2018 ஆம் ஆண்டில் மதிப்பீடு பெறப்பட்ட போதிலும் மிகுதி நடவடிக்கைகள் எடுக்க முடியாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2009 முதல் 2014 வரை ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக முன்னாள் நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தாமையின் மூலம் காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்த துடன் தற்போது 2009 முதல் அநேகமான விபத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்து தீர்த்து வைப்பதற்கு முடியுமாக உள்ளது. |
| (ஈ) | சிறிய அளவில் சேதம் ஏற்பட்டதன் காணமாக வாகனத்தை பழுதுபார்க்காமல் ஓட்டத்தில் ஈடுபடுத்திய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இந்த நிலைமை எதிர்காலத்தில் காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் போது பாதகமாகத் தாக்கமளித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2013, 2014 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பாக முன்னாள் உத்தியோகத்தர்கள் சரியான பிரகாரம் கவனம் செலுத்தாமையின் மூலம் வாகனங்களை பழுதுபார்க்காமல் நிறுத்தி வைத்திருந்தனர். இதன் காரணமாக விபத்து பழுதுபார்த்தலை மாத்திரம் மேற்கொண்டு உரிய வானத்தை ஓட்ட நிலைக்கு கொண்டுவருவதற்கு முடியாத நிலை காணப்பட்டது. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் எந்தவொரு விபத்துத் தொடர்பாகவும் பூரண அறிக்கையொன்று | விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வானங்கள் அதிகரித்தமையால் விபத்துக்களின் அளவும் அதிகரித்திருந்ததடன் ஏற்படுகின்ற ஒவ்வொரு விபத்து தொடர்பகவும் அன்றைய தினமே இந்த |

வழங்குவதற்கு 07 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படுமாயின் அந்த விபத்து தொடர்பாக உடனடியாக ஆரம்ப (பூர்வாங்க) பரிசோனையொன்று நடாத்தி ஆரம்ப அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் நி.பி. 104(4) இன் பிரகாரம் விபத்து ஏற்பட்ட திகதி முதல் 03 மாதங்களுக்குள் பூரண பரிசோதனையொன்று நடாத்தி பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் சனாதிபதி அலுவலகத்தால் அவ்வாறு நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்தமையின் காரணமாக விபத்து தொடர்பாக பொறுப்புவாய்ந்த நபரைக் கண்டுகொள்ள முடியாதிருந்ததுடன் எதர்காலத்தில் இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை ஸ்தாபிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

அலுவலகத்திற்கு தகவல்கள் கிடைப்பதில்லை. அதன் மூலம் உரிய கால எல்லையில் நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் 104(4) இன் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. அதனால் நிதிப் பிரமாணம் 104 இன் கீழ் பரிசோதனை நடர்துவதற்காக பொருத்தமான பரிசோதனை சபையொன்று நியமித்து உரிய பரிசோதனையை துரிதமாக நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதை தயவுடன் அறியத் தருகின்றோம்.

## 4. மனித வள முகாமைத்துவம்

### 4.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

சனாதிபதி அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவிகளின் எண்ணிக்கை முறையே 1,598 மற்றும் 1,346 ஆக இருந்தன. அதன் பிரகாரம் வெற்றிடமான பதவியணியினர் எண்ணிக்கை 262 அக இருந்த போதிலும் சிரேஸ்ட மட்டத்தில் மிகை பதவியணியினர் எண்ணிக்கை 10 ஆக காணப்பட்டது.